பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 08 2026 SATURDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. செமிகண்டக்டர், தொழில்நுட்பம், எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் சுயசார்பு நிலையை அடைய வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. ரயில் நிலையங்களில் பயணிகளின் வசதிகளை கருத்தில் கொண்டு மேம்பாட்டுப் பணிகள் குறித்த நேரத்தில் நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

4. பங்களாதேஷில் உள்ள கப்பல் தளத்தில் ஏற்பட்ட வாயுக் கசிவு காரணமாக 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

5. சத்தீஸ்கட், உத்தராகண்ட், மத்தியப்பிரதேச மாநிலங்களின் ஒருசில இடங்களில் இன்று கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<

நாட்டின் 80வது சுதந்திர தினம் இன்று நாடு முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி தில்லி செங்கோட்டைக்கு தேசியக்கொடியை ஏற்றுவதற்காக வருகைதந்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தில்லி கடமைப்பாதையில் முப்படைகள் மற்றும் தில்லி காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் ஏற்றுக்கொண்டார்.

இந்த சுதந்திர தின விழாவில் முதல் முறையாக தேசியப் பாடலான வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட்டதையடுத்து பிரதமர் திரு. நரேந்திர மோடி மூவண்ண தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

இதையடுத்து தேசியகீதம் இசைக்கப்பட்டது.

பின்னர் நாட்டு மக்களிடையே உரையாற்றிய அவர், செங்கோட்டையில் வந்தே மாதரம் தேசியப் பாடல் இசைக்கப்பட்டதன் மூலம் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளாக அமைந்தது என்று குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் வந்தே மாதரம் பாடல் எதிரொலிப்பதுடன் நம் அனைவரின் மனதிலும் மூவண்ணக் கொடி நிறைந்துள்ளது என்று கூறினார்.

நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக அவர் கூறினார்.

2047ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியா படைத்து வரும் சாதனைகளை உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருவதாக அவர் கூறினார்.

மொபைல் போன் உற்பத்தி, டிஜிட்டல் பரிவர்த்தனைகள், இல்லம்தோறும் குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை பிரதமர் பட்டியலிட்டார்.

மேக் இன் இந்தியா திட்டம் காரணமாக உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

உலக அளவில் விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டு வரும் நாடாக இந்தியா உள்ளது என அவர் பெருமிதம் தெரிவித்தார்.

சுயசார்பு நாடாக இந்தியாவை உருவாக்கும் வகையில் செமிகண்டக்டர் உற்பத்தி, தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

எரிசக்தி உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்ற நோக்கில் அணுமின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பது உட்பட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

2047ஆம் ஆண்டுக்குள் ஆயிரம் கிகாவாட் மின் உற்பத்தி திறன் என்ற இலக்கை எட்ட 5 அணுமின் நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்..

அடுத்த 5 முதல் 6 ஆண்டுகளில் மேலும் பல செமிகண்டக்டர் உற்பத்தி ஆலைகள் தொடங்கப்படும் என்றும், அரியவகை தாதுக்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முனைப்படன் செயல்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

வளர்ச்சித் திட்டங்கள் மூலம் கிடைக்கும் பலன்கள் ஏழை மக்களை சென்றடையச் செய்வதை உறுதி செய்யப்படும் என்று பிரதமர் கூறினார்.

முன்னதாக ராஜ்காட்டில் உள்ள தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்திற்கு சென்று பிரதமர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

>>>>>><<<<<

ரயில் நிலையங்களில் பயணிகளின் வசதிகளை கருத்தில் கொண்டு மேம்பாட்டுப் பணிகள் குறித்த நேரத்தில் நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ரயில் நிலையங்களில் பயணிகள் தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் குறித்து அவர் ஆய்வு செய்தார்.

புதுதில்லியில் உள்ள ஆனந்த் விஹார் ரயில் நிலையத்தில் பயணிகளின் வசதிக்காக அமைக்கப்பட்டு வரும் மையம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும் என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு கஷ்மீர் பகுதியில் நடைபெற்று வரும் சம்பவங்கள் கவலைக்குரியதாக உள்ளது என்றும், அப்பகுதி எல்லைதாண்டிய பயங்கரவாத செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

இந்தியா - ஆஃப்கனிஸ்தான் இடையே வர்த்தகம், தகவல் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு வலுவடைந்து வருவதாக அவர் கூறினார்.

பங்களாதேஷுக்கு கூடுதலாக டீசல் வினியோகம் செய்வது குறித்த முடிவு உள்நாட்டு தேவையைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்க இந்தியாவிற்கு வருமாறு அந்நாட்டு அதிபர் திரு. தாரிக் ரஹ்மானுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

>>>>>><<<<<

பங்களாதேஷில் உள்ள கப்பல் உடைக்கம் தளத்தில் ஏற்பட்ட வாயுக் கசிவு காரணமாக 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

*Sitakunda* பகுதியில் அமைந்துள்ள இந்த கப்பல் தளத்தில் பழுதடைந்த கப்பலின் பாகங்களை பிரித்தெடுக்கும் பணிகளில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தபோது வாயுக்கசிவு ஏற்பட்டதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவிக்கின்றனர்.

கப்பலில் இருந்து வெளியான விஷத்தன்மையுடன் கூடிய வாயு வெளியேறியதன் காரணமாக 6 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும், காயமடைந்த 2 தொழிலாளர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வாயுக் கசிவுக்கான காரணம் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கப்பல் தளங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அதிகாரிகளுக்கு அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.

>>>>>><<<<<

இந்தோனேஷியாவின் கடற்பகுதி அருகே இன்று காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது 7 புள்ளி 7ஆக பதிவானது.

இதன் காரணமாக ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் மற்றும் சேத விவரங்கள் குறித்த தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் லேசான நில அதிர்வு உணரப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து அந்நாட்டு வானிலை மையம் கிழக்கு Nusa பகுதியில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடல் மற்றும் நதிக்கரைகளின் அருகில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<

Hormuz நீரிணைப் பகுதி விரைவில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா - ஈரான் இடையே நடைபெற்று வரும் சண்டையில் ஈரான் ராணுவம் வலுவிழந்துள்ள நிலையில் அமெரிக்க அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

தொலைக்காட்சி ஒளிபரப்பில் 12 நிமிட விளம்பரத்திற்கான கால அவகாசத்தை நீக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

கேபிள் தொலைக்காட்சி விதிமுறைகளின் கீழ் கடந்த 2006ஆம் ஆண்டு தொலைக்காட்சிகளுக்கான விளம்பரத்திற்கான உச்சவரம்பு, அறிமுகப்படுத்தப்பட்டது.

தொலைக்காட்சி ஒளிபரப்பு துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் விளம்பரங்கள் வாயிலாக கிடைக்கும் வருவாய் அதிகரிப்பதுடன், டிஜிட்டல் ஊடகங்களுடன் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கும் உதவிடும் என்று மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

Ken - Betwa நதிகள் இணைப்புத் திட்டத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மறுவாழ்வு மற்றும் இழப்பீடு வழங்கப்படவில்லை என்று கூறப்படும் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றது என்ற மத்திய நீர்வள அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெரும்பாலான குடும்பங்கள் முழு இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

சத்தீஸ்கட், உத்தராகண்ட், மத்தியப்பிரதேச மாநிலங்களின் ஒருசில இடங்களில் இன்று கன முதல் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பிஹார், ஜார்கண்ட், மகாராஷ்டிரா, நாகாலாந்து, மிசோரம், திரிபுரா, மணிப்பூர், ஒடிசா ஆகிய இடங்களின் ஒருசில பகுதிகளில் அடுத்த 2 தினங்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்கால் உள்ளிட்ட பகுதிகளில் இன்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

*ஒடிசா மாநிலத்தின் வட மாவட்டங்களில் கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கை அடுத்து அப்பகுதியல் வசிக்கும் லட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.*

*இந்நிலையில் பாலசோர், Phadkak, Mayurpanch உள்ளிட்ட 14 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>><<<<<*

*இந்தியா - இலங்கை அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.*

*Galle-ல் நடைபெறும் இப்போட்டி காலை 10 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>>><<<<<*